2014 ஜூலை 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடம் கட்டித் தருகிறேன் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, கூடுதலாகக் கேட்ட கேள்விக்கு விரிவான, தெளிவான பதிலைத் தந்து விளக்கமளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 241, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

241—

சுற்றுச் சாலை

***3597—திரு. வி.சி. சந்திரகுமார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் சுற்றுச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஈரோடு வெளிவட்டச்சாலை என்றழைக்கப்படும் சுற்றுச் சாலையைப் பொறுத்தவரையில் தற்போது 2 பகுதிகள் முடிவுற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் திறக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது. மூன்றாம் பகுதிக்கு நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று

வருகின்றது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.*

திரு. வி.சி. சந்திரகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சுற்றுச் சாலை திட்டத்திற்கு 1991–1996 ஆட்சிக் காலத்திலேயே மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, சாலை உருவாக்கப்பட்டது. தற்போதுள்ள போக்குவரத்து நெரிசலுக்கேற்றாற்போல் அதனுடைய அகலத்தை இன்னும் அதிகப்படுத்தவேண்டும். அதேபோல, இந்தச் சுற்றுச்சாலை கரூர், வெள்ளவயல், காங்கேயம்– பழனி மற்றும் சென்னிமலை–காங்கேயம் ஆகிய சாலைகளைக் கடக்கின்றது. அப்படிக் கடக்கின்ற இடங்களிலே மேம்பாலங்கள் அமைக்கப்படுமா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில சாலைகளின் குறுக்கே பாலங்கள் கட்டப்படுமா என்று கேட்கின்றார். அதனை ஆய்வு செய்து படிப்படியாக, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். இன்றைக்கு அந்த வட்டச்சாலையிலே மூன்றாம் கட்டப் பணி, யானைக்கல்பாளையத்தில் ஆரம்பித்து, ஈரோடு பெருந்துறை சாலையில் அமைந்துள்ள திண்டல் என்ற இடத்தில் முடிவடையும் வகையில், 7.20 கிலோ மீட்டர் புறவழிச் சாலை அமைக்க தற்போது 5 கிராமங்களில் நிலம் கையகப்படுத்தும் பணிக்கு 15(1) அறிவிக்கை ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது. நிலத்திற்கான மதிப்பீடு உரிமைதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. சாலைப் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, விரைவில் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.*

2014 ஜூலை 24]

திரு. வி.சி. சந்திரகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரின் பதிலுக்கு நன்றி. அதே நேரத்திலே அந்தச் சுற்றுச் சாலை திண்டல் பகுதிக்குச் சென்று சேரும்வகையிலே வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது ஈரோடு மாநகராட்சியினுடைய எல்லைப் பகுதி திண்டல் வரையிலும் இருக்கின்றது. போக்குவரத்து நெரிசல் இப்போது பெருந்துறை சாலையில், திண்டல் வரையிலும் மிக அதிகமாக இருக்கிறது. எனவே, அந்தச் சாலையை திண்டலிலிருந்து 10 கிலோ மீட்டருக்கு அப்பால், புறநகர்ப் பகுதியிலே வந்து இணையும் வகையிலே மாற்றியமைக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே எந்த ஆண்டு இந்த புறவழிச்சாலை ஆரம்பிக்கப்பட்டதென்று சுட்டிக்காட்டினார்கள். ஆகவே, புறவழிச்சாலை பணி ஆரம்பிக்கின்றபோதே தனியார் இடத்திலிருந்து நிலத்தினைக் கையகப்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஏற்கெனவே, அங்கே நிலத்தைக் கையகப்படுத்தி பணிகள் தொடங்குகின்ற நிலையிலே இருக்கிறது. இந்நிலையில் வேறு இடத்திலே அந்தச் சாலையை மாற்றியமைக்க வேண்டுமென்றால், மீண்டும் நிலத்தை கையகப்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும். அதனால் பிரச்சினைகள் ஏற்படும். எனவே, ஏற்கெனவே நிலத்தை கையகப்படுத்திய பகுதியிலேயே சாலைகள் அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகரப் பகுதியில் 3 பாலங்கள் அமைப்பதற்கு கடந்த*

ஆட்சியில் பணிகள் தொடங்கப்பட்டு பாதியிலேயே நிற்கின்றன. மூன்றாண்டு காலத்திற்கு மேலாகியும் அந்தப் பணிகள் தொடராத காரணத்தால் திருப்பூர் மாநகரப் பகுதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, அந்தப் பாலப் பணிகள் உடனடியாக தொடரப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகரத்திலே 3 பாலப் பணிகள் தாமதமாக நடைபெறுவதாக இங்கே சுட்டிக்காட்டினார்கள். அதை ஆய்வு செய்து விரைவிலே பணிகளை முடிப்பதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன பதிலில் ஒரு சின்ன திருத்தத்தை மட்டும் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். மின்சார அதிர்வு எண் என்பது 49.7 என்று சொன்னதற்குப் பதிலாக 49.9 என்று திருத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். அதில் இன்னொரு விளக்கம், ஏற்கெனவே 49.7—லிருந்து 50.2 என்ற அளவிலே இருந்தது. தற்போதுதான் மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் 49.7 என்பதை 49.9 முதல் 50.2 என்று மீண்டும் திருத்தி அமைத்திருக்கிறது. ஆகவே, அந்தப் பதிலிலே 49.9* Hertz *முதல் 50.2* Hertz *என்று திருத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 242, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*